REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 11உ வெள்ளி (28—10—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 12உ சனி (29—10—55) [இதழ் 116

## இந்தியப் பேரரசு அனுமதிக்குமா?

சென்னை பல்கலைக்கழகத்தில் அணுசக்தி ஆராய்ச்சி

அணு சக்தியை சமாதான காரியங்களுக்கு உபயோகிப்பது குறித்த ஆராய்ச்சியை மேற்கொள்ளுவதற்காக, சென்னைப் பல்கலைக்கழகத்தவர் இந்திய சர்க்காரின் அனுமதி கோரியிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

பல்கலைக் கழக 'செனட்' கூட்டத்தின்போது இந்தத் தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது.

# இலங்கைத் தீவில் தனித் தமிழ்நாடு!

## சிங்கள மொழி வெறியின் எதிரொலி

## தமிழுக்கு சம நிலை தரப்படாவிட்டால் தனி நாடு கோரிக்கை உறுதியாகும்

### ஆளும் கட்சித் தமிழர்கள் கொதிப்பு

கொழும்பு, அக். 27—

'சிங்களம் மட்டுமே இலங்கையின் ஆட்சி மொழியாக —அலுவல் மொழியாக ஆகவேண்டும்; தமிழ் மொழிக்கு சிங்களத்தைப்போல சமநிலை தரக்கூடாது' என்ற வெறி, சிங்களவரிடையே — குறிப்பாக, ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினரிடையேகூட வளர்ந்து வருவதின் விளைவாக, அதே கட்சியிலிருப்போர் உட்பட பெரும்பாலான தமிழ் மக்கள், தங்களுக்கென இலங்கையில் தனி தமிழ் நாடு அமைந்தாலன்றி, தங்களது உரிமைகளும், வாழ்வும் பாதுகாக்கப்பட முடியாது என்று கருதுகின்றனர்.

இப்போதைய அமைச்சரவையில் நிதி இலாகா பொறுப்பிலிருக்கும் வி. குமாரசாமி, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்ருலும், அவர், 'தமிழ் மொழிக்கு, சிங்களத்தைப் போலவே இலங்கையில் சமநிலை தரப்படாவிட்டால், தனித் தமிழ் நாடு வேண்டும் என்று கோருவதைத் தவிர தமிழர்களுக்கு வேறு வழி இல்லை—நாங்கள் ஒருபோதும் சிங்கள ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ள மாட்டோம்' என்று குரல் கொடுத்திருக்கிருர்.

இலங்கை அரசியலில் இன்று, இரண்டு தெளிவான பிரிவுகள் தோன்றிவிட்டன. ஒன்று—சிங்களவர் முகாம்; மற்ருென்று தமிழர் முகாம்.

சிறுபான்மையினராக, ஆளும் கட்சியில் உள்ள தமிழர்களும், முஸ்லீம்களும், கட்சிக்குத் தொடர்ந்த ஆதரவும், கூட்டுறவும் தந்துவந்திருக்கின்றனர்; ஆனல், இப்போது போல் அவர்கள்—ஆளும் கட்சியில் உள்ள சிங்களவர், தமிழர்களின் அடிப்படை உரிமைகளுக்கே உலைவைக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்—என்று அஞ்சியதே இல்லை.

தமிழ் மொழியை தீவின் இரண்டாம்தர மொழியாக்க நினைப்பது கண்டு ஆளும் கட்சியில் உள்ள தமிழர்கள் கொதிப்படைந்துள்ளனர்.

வெளிநாடு சென்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், பிரதம மந்திரியுமான கொத்தலாவலை தாயகம் திரும்பியதும், டிசம்பர் திங்களில் கட்சியின் செயற் குழுக் கூட்டம் நடைபெறவிருக்கிறது; அந்தக் கூட்டத்தின்போது, கன்னங்காரா என்பவர் கொண்டுவந்துள்ள — 'சிங்களம் மட்டுமே இலங்கையின் ஆட்சி மொழியாக வேண்டும்' என்ற தீர்மானம் விவாதிக்கப்படவிருக்கிறது.

கூட்டத்தின் முடிவு என்னவாயிருக்குமோவென்று தமிழர்கள் அஞ்சியவண்ணமுள்ளனர்.

தீர்மானத்திற்கு, கட்சியில் உள்ள தமிழ் உறுப்பினர்கள் இரு திருத்தங்களைக் கொண்டுவர எண்ணியுள்ளனர்.

ஒன்று — 'சிங்களத்துடன் தமிழ் மொழியும் ஆட்சி மொழியாகவேண்டும்'—என்பது.

இந்தத் திருத்தம் தோல்வியுற்ருல், 'இலங்கையில் ஒரு தனி தமிழ்நாடு வேண்டும்' என்று கோரி, திருத்தம் கொண்டுவருவது என்றும் முடிவெடுத்திருக்கின்றனர்.

இலங்கைத் தமிழர்களின் எதிர்காலத்தைச் சூழ்ந்துள்ள இருள் பயங்கரமானதாயிருப்பதாக தமிழர்கள் அஞ்சிய வண்ணமுள்ளனர்.

## நேரு கண்டுகளித்த 'இராம லீலா'!

### 'இராவணன் கொல்லப்படுமுன்' ஐவர் பலி!

புதுடில்லி, அக். 27—

இராவணன், அவனது மகன் மேகநாதன், சோதரன் கும்பகர்ணன் ஆகியோரது 'கொடும்பாவி'கள் இன்று இராம லீலா மைதானத்தில் கொளுத்தப்பட்ட காட்சியை, பல்லாயிரக்கணக்கான மக்களுடன் தானும் கண்டுகளித்தது மட்டுமின்றி இந்தியப் பிரதமர் நேரு, இங்கு வந்திருக்கும் இந்தோனேஷியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் முகம்மது ஹட்டாவுக்கும் காட்டி மகிழ்வித்திருக்கிருர்.

பல வெளிநாட்டுத் தூதவர்களும் இந்த விழாவைக் கண்டு களித்தனராம்.

இதற்குமுன், பெரிய ஊர்வலமும், இராம-இராவணப் படைகளிடையே போலி யுத்தமும் நடைபெற்றிருக்கிறது.

தசராவின் கடைசி நாள் விழா இப்படி தலைநகரில் கொண்டாடப்பட்டிருக்கிறது.

தலைநகரை அடுத்த பருக்காபாத் நகரில், இந்த 'இராம லீலா' விழா நடைபெற்றபோது, ஊர்வலத்தை வேடிக்கை பார்ப்பதற்கு ஒரு மாடி மீது ஏராளமானேர் கூடியதினுல், மாடி சரிந்து கீழே நின்றுகொண்டிருந்தவர்கள் ஐந்து பேர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

'இராமன் இராவணனைக் கொல்வது' என்ற விழாவின் கட்டம் நடைபெறும் முன்னர், இந்தக் 'கொலை'கள் நடைபெற்றிருக்கின்றன.

மேலும் காயமடைந்த 2½ பேர்களது நிலை அபாயகரமாயிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## முதன் மந்திரி பேராசை!

### கேரளம் மிகச் சிறியதாம்; அதனுல் தமிழ் தாலுகாக்கள் வேண்டுமாம்!

பனம்பள்ளி மேனன் கூற்று

திருவனந்தபுரம், அக். 27—

'தென் திருவாங்கூர் நான்கு தாலுகாக்களும், நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூர் தாலுகாவும் கேரளத்துடன் இணைய வேண்டும்' என்று கோரி, மனு ஒன்று இந்தியப் பேரரசிடம் தரவிருப்பதாக திரு-கோச்சி முதன் மந்திரி தெரிவித்திருக்கிருர்.

தகராறு உள்ள பகுதிகள் பற்றிய நிர்ணயம் மேற்கொள்ளுவதற்கு யூனியன் சர்க்கார் ஒரு எல்லைக் குழுவை நியமிக்கும் என்று நம்புவதாயும் அவர் தெரிவித்திருக்கிருர்.

நவம்பர் மத்தியில், திரு-கொச்சி சட்டசபை கூடி, மாநிலக் குழுவின் சிபாரிசுகள் குறித்து விவாதிக்கும் என்றும், சிபாரிசுகள் குறித்து கவனிப்பதற்கு என்றே சர்க்கார் அலுவலகத்தில் ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிருர்.

★

### காரணம் வேறு கூறுகிருர்!

"உத்தேசிக்கப்பட்டுள்ள கேரள மாநிலம்தான் இந்தியாவிலேயே மிக சிறிய மாநிலமாக இருக்கும்; அதன் மொத்த பரப்பளவு 14 980 சதுர மைல்; ஆனல், வடநாட்டில் உள்ள மத்திய பிரதேச மாநிலம் கேரளத்தைப் போன்று சுமார் 12 மடங்கு பெரிய மாநிலமாக அமைகிறது; அதாவது, 1,71,200 சதுரமைல் பரப்பளவு உடையதாயிருக்கும்; ஆனல், மத்திய பிரதேசத்தின் மக்கள் தொகை 2·61 கோடி; கேரளத்தின் மக்கள் தொகை 1·36 கோடி.

(4-ம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தான் — ஆப்கன் தகராறு: மேற்கு நாடுகள் அச்சம்!

பாகிஸ்தான்—ஆப்கனிஸ்தான் நாடுகளிடையே எழுந்துள்ள தற்போதைய தகராறு மேற்கத்திய நாடுகளுக்குப் பெரும் கவலையைத் தந்துள்ளதாகத் தெரியவருகிறது.

தகராறின் காரணமாக, ஆப்கனிஸ்தானுக்கு வர்த்தகம், போக்குவரத்து முதலிய வசதிகளைத் தருவதற்குப் பாகிஸ்தான் மறுத்து வருவதால், தனக்கு வடக்கில் அண்டை நாடாக உள்ள சோவியத் ரஷ்யாவிடம் இந்த வசதிகளை ஆப்கனிஸ்தான் எதிர்பார்க்கும் என்பதினுலேயே, மேற்கு நாடுகளுக்கு இந்த அச்சம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

மேலும், சோவியத் பிரதமர் மார்ஷல் புல்கானின், அடுத்த திங்களில் இந்தியா வரும்போது ஆப்கனிஸ்தான் வரவும் சம்மதம் தெரிவித்திருப்பதால், ஆப்கன்—ரஷ்ய நாடுகளிடையே உறவு பலப்படும் என்றும், மேற்கு நாடுகள் அச்சமுறுகின்றனவாம்.

இந்தத் தகவல்கள், கராச்சியில் உள்ள வெளிநாட்டுத் தூதவர்களின் வட்டாரங்களிலிருந்து கிடைப்பதாகத் தெரிகிறது

இதற்கிடையில் பாகிஸ்தான் வட்டாரங்கள், தொடர்ந்து ஆப்கன் எல்லைக்குள் துருப்புகள், பழங்குடி மக்களின் நடமாட்டம் அதிகரித்துவருகின்றது என்ற தகவலை தந்திருக்கின்றன.

பாகிஸ்தான் எல்லையில், பாக். துருப்புகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாயும், மிகுந்த விழிப்புடன் அவை இருந்துவருவதாயும் கூறப்படுகிறது.

இவற்றிற்கிடையில் ஆப்கனிஸ்தானுக்கு, ஆயுதங்கள் விற்பதற்கு செக்கோஸ்லோவேகியா ஒப்புதல் தந்திருப்பதாயும் கூறப்படுகிறது.

ஆப்கன் இராணுவத்தினரிடம் நவீன கால ஆயுதங்கள் இல்லை என்பதால், வர்த்தக முறையில் செக் நாட்டிடமிருந்து ஆயுதங்கள் பெறுவதற்கு ஆப்கன் சம்மதித்துவிட்டதாம்.

இதற்காக ஆப்கன் இராணுவ உயர்தர அதிகாரிகள் அடங்கிய ஒரு குழுவினர், தங்களுக்குத் தேவையான ஆயுதங்கள் செக் நாட்டில் கிடைக்குமா என்பதறிய அங்கு செல்லவிருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இதுகாலவரை, தனது இராணுவத்தினரையும், விமானப் படை அதிகாரிகளையும் பல துறைகளில் பயிற்றுவிப்பதற்கு இந்தியாவையே ஆப்கன் நம்பிவந்திருக்கிறது; ஆனல், இந்தியா, பயிற்சியளிப்பதில் ஒரு குறிப்பிட்ட அளவே உதவ முடிகிறதாம்.

## க்ஷயரோகத்தை ஒழிக்கும் முயற்சி

### ரூ. 35,000 நன்கொடை

காரைக்குடியிலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ள கோமனுதபுரம் க்ஷயரோக சானிடோரியத்திற்கு உலக சுகாதார நிறுவனம் ரூ. 35,000 நன்கொடை வழங்கியிருப்பதாகத் தெரிகிறது.

## உணவுப் பொருள் வர்த்தகத்தில் ரூ. 278 கோடி சர்க்காருக்கு நஷ்டம்?

### இல்லையென மறுப்பு

புதுடில்லி, அக். 26—

"இந்தியப் பேரரசு 1944—53-க்கு இடையில் உள்ள பத்தாண்டுகளில், உணவுப் பொருள் வர்த்தகத்தில் ரூ. 277·4 கோடி நஷ்டமடைந்திருக்கின்றனர். இது தனியார் துறை வர்த்தகமாக இருந்திருப்பின் தவிர்த்திருக்கக்கூடியது;

"உணவுப் பொருள்களைச் சேகரித்துவைத்திருந்த வகையில், ஏராளமான உணவுப் பண்டங்கள் வீணுயின. உணவுப் பொருள்களைப் பராமரிப்பதற்கும், ஓரிடத்திலிருந்து மற்ருேர் இடத்திற்குக் கொண்டு செல்வதற்குமாக சர்க்கார் தேவையான அளவுக்கு மிஞ்சிச் செலவிட்டிருக்கின்றனர்,"

—என்றும், இதுபோன்ற பலவகையான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, கல்கத்தா முதலாளிகள் சங்கத்தவர் ஒரு துண்டு வெளியீடு பிரசுரித்திருக்கின்றனர்.

சர்க்கார், இந்தக் குற்றச்சாட்டுகளை, காரணங்களைக் காட்டி மறுத்து, ஒரு பத்திரிகைக் குறிப்பு வெளியிட்டிருக்கின்றனர்.

இறக்குமதியான உணவுப் பொருள்களுக்கு சர்க்கார் வழங்கிய மானியத் தொகை எல்லாம் நஷ்டம் என்று கூறமுடியாது என்றும் சர்க்கார் தெரிவித்திருக்கின்றனர்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ்　ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை　28—10—'55　வெள்ளி

# நீரோ நிகர் பாவோ டாய்!

ரோமாபுரி தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தபோது அரண்மனைக்கூடத்தில் 'பிடில்' வாசித்துக் கொண்டிருந்ததாக நீரோ மன்னனைப் பற்றிச் சொல்வதுண்டு.

தென் வியட்நாம் மன்னராயிருந்த பாவோ டாய் அப்படிப்பட்டவர்தான்; வியட்நாமில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டு, பொழிந்து கொண்டிருந்த குண்டுமாரி, பிணக் குவியல்களை உண்டு பண்ணிக் கொண்டிருந்த நெருக்கடியான நேரத்தில் எல்லாம் நாட்டிலேயே இருக்கவில்லை; தன்னை மன்னராக்கிய பிரான்ஸ் நாட்டின் தலைநகரிலே, தனி மாளிகையில் உல்லாசமாகக் காலங் கழித்துக்கொண்டிருந்தார்.

'அந்த மன்னர் இனியும் எங்களது அரசாங்கத் தலைவராக இருக்கவேண்டாம்' என்று, பிரதமரான தீன் தியெம் கடந்த ஞாயிறன்று நடத்திய வாக்கெடுப்பின்போது, தென் வியட்நாம் வாக்காளர் பெருமக்கள் தீர்ப்பளித்திருக்கின்றனர்.

நீண்ட காலமாக பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் பிடிப்பிலிருந்த இந்தோ—சீன நாடுகள் மூன்றினுள், வியட்நாம் ஒன்று. இரண்டாம் உலகப் பெரும் போரில் ஜப்பானின் ஆதிக்கத்திற்கு ஆளாகி, பின்னர், போரில் ஜப்பான் தோல்வி கண்டதை ஒட்டி, திரும்பவும் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திடம் இந்தோ—சீன நாடுகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

போர் முடிந்த நாளிலிருந்தே இந்தோ—சீனாவின் விடுதலைக்காக வியட்மின் படைகள் தீவிரமாகப் போராடி வந்தன; ஆதிக்கக்காரர்கள் ஓர்புறமும், விடுதலைப் பட்டாளம் ஓர்புறமும் நின்று தாக்குதல்களைப் பறிமாறிக்கொண்டன.

'வியட்மின் விடுதலைப் படைக்கே வெற்றி' என்ற செய்திதான், ஒவ்வொரு களத்திலும் கிடைத்து வந்தது. நெருக்கடி அதிகமாகி வந்ததின் விளைவாக, 'இனியும் நமது ஆதிக்கத்தை நீடிப்பது இயலாது' என்றநிலை பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு தோன்றிற்று. பிரான்ஸ், தனது 'கைப்பாவை' யாக—'மன்னர்' என்ற பெயருடன் வியட்நாம் ஆட்சிப் பீடத்தில் அமர்த்திவைத்திருந்த பாவோ டாய், தனது நிலைக்கு ஆட்டம் ஏற்படும் என்று தெரிந்ததும், தீன் தியெமை பிரதமராக்கிவிட்டு, பாரிசிற்கு ஓடி ஒளிந்துகொண்டார். தீன்-பின்-பூ கோட்டை விழும்போதெல்லாம்கூட, மன்னர் பாவோ டாய், வியட்நாமில் இருக்கவில்லை. பின்னர், கடந்த ஆண்டு ஜூலைத் திங்களில், ஜினிவாவில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் கூடி, ஒரு ஒப்பந்தம் செய்து, வியட்நாமை, 'வடக்கு—தெற்கு' என, இரு கூறுகளாக்கி, 'இரண்டையும், குறிப்பிட்ட காலத்திற்குப் பின் நடைபெறும் தேர்தல்களுக்குப்பிறகு ஒன்றாக்கிக் கொள்ளுவது' என்று விதித்து, போர் நிறுத்தம் ஏற்படச் செய்தன.

வட வியட்நாம் குடியரசுத் தலைவரான டாக்டர் ஹோ-சி-மின், வியட்நாம் ஒன்றுபடுவதற்கு தேர்தல்களை நடத்த எந்த நேரத்திலும் தயாராயிருப்பதாயும், அதற்கான ஏற்பாடுகளைத் தாம் முடித்துவிட்டதாயும் அறிவித்து வருகிறார்.

ஆனால், தென் வியட்நாம் பிரதமரான தீன் தியெம், 'தேர்தல்களை நடத்த விரும்பவில்லை' என்று பகிரங்கமாகவே அறிவித்து வந்திருக்கிறார்.

இதற்கிடையில், கடந்த ஆண்டு ஜூலையிலிருந்து இன்றுவரையுள்ள பதினைந்து திங்கள்களில் எத்தனையோ உள்நாட்டுக் குழப்பங்கள் தென் வியட்நாமில் நிகழ்ந்திருக்கின்றன. அந்தக் குழப்பங்களை எல்லாம் அடக்குவதற்கு, அமெரிக்க நிதி உதவியினால் தீன் தியெம் முயன்று வந்திருக்கிறார்.

அந்த தீன் தியெம்தான், இப்போது, வாக்கெடுப்பின் விளைவாக, தென் வியட்நாமின் அரசியல் தலைவராகியிருக்கிறார். அமெரிக்கா எதிர்பார்த்தது போல்—கம்யூனிஸ்டு வியட்மினுக்கு தியெம் எதிரி என்பதால் — அவரது புதிய நிலைக்கு அங்கீகாரம் அளித்திருக்கிறது. பிரான்சும் — அமெரிக்க நிர்ப்பந்தத்தின் விளைவாக—பாவோ டாயை கைகழுவிவிட்டு, தியெமுக்கு அங்கீகாரம் தந்திருக்கிறது.

50 சத விகித வாக்காளர்கள் இந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்பதை நாம் மறந்து விடுவதிற்கில்லை.

இந்த நிலையில், தீன் தியெம், தனது புதிய நிலையை சாசுவதமானதாக எண்ணி, தொடர்ந்து ஜினிவா ஒப்பந்தம் அமுலாகாமல் செய்யும் பணியை மேற்கொள்ளுவாரேயானால், அது, வியட்நாமில் மீண்டும் அமைதிக்கு உலை வைப்பதாக முடியும் என்பது எல்லோரும் அறிந்ததே!

நீரோ நிகர் பாவோ டாய் ஒழிந்தபின்னர் அதிபராகியுள்ள தீன் தியெம், அமெரிக்கர், பிரெஞ்சுக்காரர், பிரிட்டிஷார், வியட்மின், செஞ்சீனர் இவர்கள் எல்லாம், ஜினிவா ஒப்பந்தத்தை எப்படி அமுல் செய்கிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

## இந்தியாவில் உள்ள சிறுபான்மை முஸ்லிம்கள்

### பாகிஸ்தான் தூதுவர் அறிவுரை

ஷில்லாங், அக். 24—

இந்தியாவில் உள்ள சிறுபான்மை முஸ்லீம்கள் பாகிஸ்தானை மறந்துவிடவேண்டும் என்றும், அவர்களுக்கு ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் அவற்றை இந்திய சர்க்காரிடமே தெரிவித்துப் பரிகாரம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் இந்தியாவில் உள்ள பாகிஸ்தான் தூதுவர் கஜன்பர் அலிகான் தெரிவித்திருக்கிறார்.

## தமிழ் தாலுகாக்களை தர இயலாதாம்!

### திரு-கொச்சி முதன் மந்திரி கூற்று

சென்னை, அக். 26—

"ஏற்கனவே பொருளாதாரத் துறையில் பின்தங்கியதாயிருக்கும் திரு-கொச்சியிலிருந்து வளமான தென் திருவாங்கூர் பகுதியை சென்னையுடன் இணைப்பதில் கேரளத்திற்கு உள்ள கஷ்டங்களை நான் டில்லி மாநாட்டில் எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

"இப் பாதுள்ளபடியே அந்த ஐந்து தாலுகாக்களும் கேரளத்துடன் இருக்க வேண்டுமென்பதற்காக, திரு-கொச்சியில் பெரும் கிளர்ச்சிகள் நடைபெறுகின்றன;

"இந்நிலையில் அவற்றை சென்னைக்கு இழந்துவிட, கேரளத்தால் இயலாது என்று கருதுகிறேன்,"

என்று, திரு-கொச்சி முதன் மந்திரி இங்கு தெரிவித்திருக்கிறார்.

"குழு சிபாரிசு செய்தன்னபடி, காசர்கோடு பகுதியையும் திரு—கொச்சியுடன் இணைக்குமாறும் டில்லியில் கோரினேன்" என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## 'பெல்லாரியுடன் மேலும் ஒரு வட்டம் வேண்டும்'

### ஆந்திராவின் கோரிக்கை

கர்நூல், அக். 26—

"துங்கபத்திரா திட்டத்தின் நிர்வாகம் சரிவர நடைபெற வேண்டுமானால், இப்போது மைசூரில் உள்ள சாந்தனூர் தாலுகாவின் தோர்னகல் பிர்க்கா, ஆந்திரத்துடன் இணையவேண்டும் — என்று கோரவிருக்கிறோம்.

"எட்டு மைல் நீளத்திற்கு அந்த பிர்க்கா, ஹோஸ்பெட், பெல்லாரி இடையே உள்ளது; இந்த பிர்க்கா வழியாகத்தான், பெல்லாரிக்கும் — ஹோஸ்பெட்டிற்கும் இடையில் உள்ள சாலை ஓடுகிறது; எனவே, துங்கபத்திரா திட்டத்தின் நலன் கருதி, அந்த பிர்க்கா ஆந்திரத்துடன் இணையவேண்டும் என நாங்கள் கோருவது நியாயமே,"

என்று, ஆந்திர துணை முதலமைச்சர் என். சஞ்சீவ ரெட்டி தெரிவித்திருக்கிறார்.

## கிராமந்தோறும் ஒரு வானொலி!

புதுடில்லி, அக். 25—

இரண்டாம் திட்டத்தின் கீழ் கிராமங்களில் வானொலிகளை அமைப்பதற்கு சுமார் ரூ. 4 கோடி செலவில் ஒரு திட்டத்தை சர்க்கார் வகுத்திருக்கின்றனர்.

1000 அல்லது அதற்கும் குறைவான மக்கள் தொகையுடைய எல்லா கிராமத்திற்கும் ஒரு வானொலி அமைத்துத் தருவதற்குத் திட்டம் வழி செய்கிறதாம்.

## எகிப்து மேற்கொள்ளும் இராணுவ ஒப்பந்தங்கள்

### இஸ்ரேல் ஆக்கிரமிப்பைச் சமாளிக்கவாம்

கெய்ரோ, அக். 25—

எகிப்து-சவூதி அரேபியா ஆகிய நாடுகள் இன்று ஒரு இராணுவப் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டன.

எகிப்தும், சிரியாவும் சில நாட்களுக்குமுன் இதுபோன்ற ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டிருக்கின்றன.

எகிப்துடன், லெபனானும் இது போன்றதொரு ஒப்பந்தத்தைச் சீக்கிரமே செய்துகொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பைச் சமாளிப்பதற்கே, இதுபோன்ற ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுகிறதாம்.

# 'சிந்தனையும்-செயலும்'

## 'மேகமும்-மழையும் போன்றவை'

### மதுரைக் கல்லூரி மாணவரிடை அண்ணாதுரை

மதுரை, அக். 24—

"எல்லோரும் சிந்திப்பது சிந்தனையாகாது; ஒரு சிலர் சிந்திப்பது, அவர்கள் காலத்திலேயே பயன்படும்; சிலரது சிந்தனை, அவர்களுக்குப் பிற்காலத்தில் பயன்படும்; சிலரது சிந்தனை, எக்காலத்திலும்—எல்லோருக்கும் பயன்தரக்கூடியதாகவிருக்கும். மாணவர்கள், எதிர்காலத்தில் எல்லோருக்கும் பயன்தரக்கூடிய சிந்தனையை மேற்கொள்ளவேண்டும்."

"கிரேக்க நாட்டு அறிஞர் சாக்ரடீஸ், தான் சிந்தித்தது மட்டுமின்றி, பிறரையும் சிந்திக்க வைத்தார். கிரேக்க நாட்டுச் சிந்தனையாளர் சாக்ரடீசின் மூலம் மேல் நாட்டினரும், அவர் மூலம் மற்ற நாட்டினரும், சிந்திக்கத் தொடங்கினர். மேல்நாட்டுச் சிந்தனையாளரில் சிறந்து விளங்கிய சாக்ரடீசைப் போல் தமிழ்நாட்டிற்குச் சிந்தனைச் செல்வம் அளித்தவர் திருவள்ளுவராகும். அவர் அளித்த சிந்தனைக் களஞ்சியம் திருக்குறளாகும்; திருவள்ளுவரும், சாக்ரடீசும் பெரும்பாலும் ஒரேமாதிரியான சிந்தனையாளர்களாவர்."

"மேல் நாட்டினர், தங்கள் சிந்தனையைச் செலுத்தி உழைப்பைக் குறைத்து, இயற்கை வளத்தைப் பெருக்கி, இன்ப வாழ்வைக் கொண்டாட சமுதாயத்தையும்—ஆட்சியையும் அமைத்தனர்; ஆனால், தமிழர்களோ, தங்கள் சிந்தனையை உலக வாழ்விற்கு அப்பாற்பட்ட பிரச்சினைகளில் செலுத்தினர்; இடைக்காலத்திலே, தமிழ் மக்களின் அறிவு சேற்றிலே சிக்கிவிட்டது."

—இவ்வாறு, மதுரை கல்லூரிப் பேரவையின் ஆதரவில் நடைபெற்ற மாணவர்கள் கூட்டத்தில் பேசுகையில், தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு மாணவர் மன்றத் தலைவர் தோழர் மலையாண்டி தலைமை வகித்தார்.

கல்லூரி முதல்வர் தோழர் தோத்தாத்ரி, வரவேற்றுப் பேசினார்.

#### மனப்பான்மைக்கு ஏற்ப மாறுகிறது!

'சிந்தனையும் - செயலும்' என்ற பொருள் பற்றி அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் சொன்னார்:—

"'சிந்தனையும்-செயலும்' ஒன்றாக இணைந்திருக்க வேண்டும்; நீரும்-மேகமும் போல, சிந்தனையும் - செயலும் தொடர் மொழி மட்டுமல்ல—உலக வரலாற்றிலே முற்றுப் பெறாத் தொடர் கதையும் ஆகும்.

"உலகில் எல்லா மனிதர்களும், அவரவர்கள் சக்திக்கும்-தகுதிக்கும் ஏற்றவாறு சிந்தனை செய்கின்றனர்.

"ஒரு பொருளைப் பற்றிப் பலர் பலப் பலவிதமாகச் சிந்திக்கின்றனர். காணுகின்ற பொருள் பற்றிய சிந்தனை, காணுகின்றவரின் கருத்துக்கும், பயிற்சிக்கும் ஏற்றவாறு மாறுகின்றன சிந்தனை என்பது அவரவர் மனப்பான்மைக்கேற்றவாறு மாறுகிறது.

#### மன்னர்கள் சிந்தனையில் வேறுபாடுகள்!

"தமிழர்களின் சிந்தனை மாண்புடையதாக இருந்தது; அரசியல், பொருளாதாரம், கல்வி, வணிகம், காதல் ஆகிய துறைகளில் எக்காலத்திலும் பயன்தரக்கூடியதாயிருந்தது; தமிழ் மன்னர்கள் சிந்தனைக்கும்—வடநாட்டு மன்னர்களின் சிந்தனைக்கும் வேறுபாடுகளும், முரண்பாடுகளும் காணப்பட்டன.

#### தமிழ் நாட்டு மன்னர்கள் கொண்ட மாண்பு!

"வடநாட்டு மன்னர்கள், 'அரசு என்பது அரசருடைய உடைமை' என்று எண்ணினர்; ஆனால் தமிழகத்து மன்னர்களோ, 'அரசு என்பது மக்களுடையது' என்றும், 'மக்களுக்காக ஆள வேண்டிய கடமை மன்னர்களுடையது' என்றும் எண்ணினர்.

"17-வது நூற்றாண்டின் இறுதியிலேதான் பிரான்சு நாட்டில் ரூசோ தோன்றி, மன்னருக்கும்—மக்களுக்குமிடையே உள்ள உறவு குறித்தும், மக்களுக்காக மன்னன் ஆளவேண்டியது பற்றியும் எடுத்துக் கூறினர்; ஆனால், தமிழகத்திலோ, இக்கருத்து நீண்ட நாட்களாகவே இருந்து வருகிறது.

#### நாட்டிற்குத் தொண்டாற்ற தயாராகுங்கள்!

"பழங்கால வழக்கங்களில், தேவையானவற்றை வைத்துக் கொண்டு தேவையில்லாத வழக்கங்களை விட்டுவிட வேண்டும்; மாணவர்கள், தங்கள் சிந்தனையை நல்ல முறையில் வளர்த்து எதிர்காலத்தில் நாட்டிற்குச் சிறந்த முறையில் தொண்டாற்றத் தயாராக வேண்டும்.

#### ஆர்வத்தைக்காட்டும் வாயில்கள்

"கடந்த 10 அல்லது 16 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட தமிழ் மொழிக்கு ஏற்றமும், பெருமையும் தற்பொழுது ஏற்பட்டுள்ளது; அக்காலத்தில் இருந்ததைவிட இன்று தமிழாசிரியர்களின் மதிப்பு உயயர்ந்துள்ளது; மாணவர்களுக்குத் தமிழில் நல்ல ஆர்வமும், பற்றும் ஏற்பட்டுள்ளது.

"மாணவர்கள், கையெழுத்துப் பிரதிகளின் மூலம் கவிதைகளும், கட்டுரைகளும் தீட்டி வருகின்றனர்; நாடகங்கள் எழுதி வருகின்றனர்; இது அவர்களின் தமிழ் ஆர்வத்தைக் காட்டுகிறது; தமிழ் ஏடுகளை மாணவர்களும், மற்றும் பல்வேறு அலுவல்களில் ஈடுபட்டிருப்பவர்களும் ஆதரித்து வாங்குவது, மக்களுக்குத் தமிழ் மொழியில் ஏற்பட்டுள்ள ஆர்வத்தையே காட்டுகிறது," என்று, குறிப்பிட்டார்.

## ஐ. நா. உறுப்பினர்களுக்கு திருக்குறள் பிரதி!

திருச்சி, அக். 26—

திங்களன்று இங்கு நடைபெற்ற ஐ. நா. நிறுவன நாள் கூட்டத்தில், ஐ. நா-வில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பு தரப்படவேண்டும் என்று ஐ. நா. நிறுவனத்தையும், இந்திய சர்க்காரையும் கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஐ. நா.-வின் இலட்சியங்களைப் பலப்படுத்துவதற்கு அதன் மூலம் வழி பிறக்கும் என்று தெரியவருகிறது. திருச்சி மாவட்ட நிர்வாக அதிகாரி ஆர். எஸ். மலையப்பன் அக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினாராம்.

இந்தியாவில் 1955 ஏப்ரல்—ஜூன் மூன்று மாத காலத்தில் மொத்தம் 24,966 தையல் இயந்திரங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இந்த எண்ணிக்கை அதற்கு முந்திய கால் வருடத்தில் உற்பத்தியானவற்றைவிட 3,448 அதிகமாகும்.

# கழகச் செய்திகள்

## சித்தூர் மாவட்ட தி. மு. கழகம்

தி மு. கழகத் துணைப் பொதுச் செயலாளரின் அறிக்கைப்படி சித்தூர் மாவட்ட தி. மு. கழகத் தேர்தல், 16—10—55-ம் நாள் பிற்பகல் 2 மணிக்கு சித்தூர் மாதா கோவில் தெருவிலுள்ள தி. மு கழகக் கட்டிடத்தில், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்காணும் தோழர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

செயலாளர்: கே. பார்த்தசாரதி —சித்தூர்.

துணைச்செயலாளர்: என். பி வீராசாமி —நல்லவாடன்பேட்டை.

பொருளாளர்: ஏ. டி. கே. இராமசாமி —பொதட்டூர்பேட்டை

பொதுக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்:—

1 கே பார்த்தசாரதி, சித்தூர்.
2 என் ஏ. ரஷீத், திருத்தணி
3 வி நரசிம்மன், சித்தூர்.

## சேலம் மாவட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம்

23-10-55ல் சேலம் மாவட்ட தி. மு க உறுப்பினர் கூட்டம் தோழர் ஜி பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் க கு சின்னுசாமி அவர்கள் பொதுக்குழு உறுப்பினராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், மேட்டூர் தோழர் துரைராஜ் இயற்கை எய்தியதற்கும், சேலம் மாவட்ட செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்களின் தாயார் பார்வதி அம்மையார் இயற்கை எய்தியதற்கும், தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் குழந்தை இராஜகுமாரி இயற்கை எய்தியதற்கும் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

## தேசுமுகிப்பேட்டை தி.மு. கழகத்திற்கு மனை!

தேசுமுகிப்பேட்டை தி. மு. கழகத்தவர், தாங்கள் தீர்மானித்திருந்தபடி, தேசுமுகிப்பேட்டை, தெற்குப் பாடசாலை வீதியில், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கெனச் சொந்தமாக மனையொன்று வாங்கியுள்ளனர்.

## பம்பாய் தி. மு. கழகம்

பம்பாய் தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டம் தாராவி வாழைக் கட்டவாடி க. வ. சங்க அறையில் தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் 23—10—55 காலை 10-30 மணியளவில் நடைபெற்றபோது, தோழர் த மு பொற்கோ அவர்கள், முன்கூட்ட அறிக்கைகளையும், கடிதப் போக்குவரத்துக்களையும் வாசித்தார்.

பின்னர், நன்கொடை வசூலிக்க ரசீது புத்தகம் பெற்றுச் சென்ற தோழர்கள் அதற்குரிய தொகையை உடனடியாக வசூலித்து 20—11—55ல் கூடுகின்ற பொதுக்குழுவில் தவறாமல் செலுத்திவிட வேண்டுமெனவும், அத்தொகையை ப. தி மு க. பணிமனை அமைப்பதைத் தவிர வேறெதற்கும் செலவழிக்கக் கூடாதெனவும், தலைமை நிலயத்தில் பதிவு செய்வதற்குரிய கிளைக் கழகப் பதிவுச் சீட்டை கிராமி, அத்துடன் உறுப்பினர் கட்டணத்தையும் 20-11-55ல் கூடுகின்ற பொதுக்குழுவில் செலுத்திவிட எல்லாக் கிளைக் கழகத்தையும் கேட்டுக்கொண்டும் தீர்மானிக்கப்பட்டது. பின்னர், தணிக்கையாளர்களாகத் தோழர்கள் சு. தங்கவேலன், த. மு. பொற்கோ தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## செம்பியம் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

### நிறைவேறிய தீர்மானம்

"சென்ற 1946-ம் ஆண்டில், சென்னை நகராண்மைக் கழகத்துடன் செம்பியம் வட்டம் இணைக்கப்பட்டதும் அங்கு ஒரு தாய்-சேய் நல, பிரசவ விடுதியும் கட்டப்பட்டது. ஆனால், சென்ற 6—10—55-லிருந்து படுக்கை வசதிகளையெல்லாம் அங்கிருந்து மாற்றி 6-வது வட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டமைக்கு வருத்தம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது; ஏறக்தாழ 30,000 மக்களைக்கொண்ட இப்பகுதியில் இருந்து நகராண்மைக் கழக அதிகாரிகள் அதனை மாற்றியமை குறித்து வன்மையாகக் கண்டனம் தெரிவிக்கப்படுகிறது. எனவே, மாற்றப்பட்ட பிரசவ விடுதி படுக்கைகளை மறுபடியும் இவ்வட்டாரத்திற்கே மாற்றியமைக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறது," என்று, 23-10-55 அன்று, சென்னை செம்பியம் தி மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## சென்னை 17-வது வட்ட தி. மு. கழகம்

23—10—55-ல் நடைபெற்ற கிளை தி மு கழக செயற் குழு கூட்டத்தில், பொருளாளர் தோழர் இரா. இராசாபாதருடையவும் தோழர் து. நாராயணன் (செ கு உ.) விலகுதலை ஏற்றுக்கொண்டும், 30—10—55-ல் நடக்கவிருக்கும் பொது உறுப்பினர் கூட்டத்தில் வெளியிடுவதற்கு அறிக்கையும், வரவு-செலவையும் குழு பரிசீலித்து ஏற்றுக்கொண்டும், கிளை கழகத்திற்கென சொந்தக் கட்டிடம் வாங்க முயற்சி செய்யும்வகையில் சில திட்டங்களைத் தீட்டி பொது உறுப்பினர் கூட்டத்தில் நிறைவேற்றி—மத்திய கழக அனுமதியுடன் 'கட்டிட நிதி' திரட்டும் பணியில் ஈடுபடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## தாத்தையங்கார்பேட்டை தி. மு. கழகம்

24—10—55 மாலை 6½ மணியளவில், தாத்தையங்கார்பேட்டை தி. மு. கிளைக் கழகச் செயற் குழுக் கூட்டம் தோழர் எம். எஸ் என். இராசன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது நவம்பர் திங்கள் முதல் வாரத்தில் கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## தலையாயமங்கலம் தி. மு. கழகம்

18—10—55ல் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தோழர் பா. கேசவன் அவர்களின் விலகல் கடிதம் ஏற்கப்பட்டு, தோழர் பொ. செங்கசாமி அவர்கள் செயலாளராகவும், தோழர் சம்மந்தம் அவர்கள் பொருளாளராகவும், தோழர் கேசவன் உறுப்பினராகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.

## நிலக்கரி உற்பத்தி

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள்ளாக, வருடத்துக்கு 230 இலட்சம் டன் நிலக்கரி அதிகப்படியாக உற்பத்தி செய்வதென்று இலட்சிய அளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; இதையும் சேர்த்து வருடாந்திர உற்பத்தி அளவு 600 இலட்சம் டன்னுக்குக் கணக்காகும்.

# மாநில மாநாட்டு நன்கொடை

மாநில மாநாட்டுக்கு நன்கொடை அளிக்க ஆர்வத்தோடு துடித்துக்கொண்டிருக்கும் தனிப்பட்ட தோழர்கள் நேரே உடனடியாகத் தலைமை நிலயத்திற்கு நன்கொடைகளை அனுப்பிவைக்குமாறு விரும்பிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆங்காங்குள்ள கழகத்திற்கு ஆதரவான தனிப்பட்ட அமைப்புகளும், நிதி சேர்த்துவிட்ட மாவட்டங்களைச் சார்ந்த கிளைக் கழகங்களும் நன்கொடைகளைத் தொடர்ந்து அனுப்பிவைக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

'மாநில மாநாட்டு நிதிக்கு' என்று குறிப்பு எழுதி, நன்கொடை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:—

பொதுச்செயலாளர், தி. மு. கழக தலைமை நிலயம்,
'அறிவகம்', — இராயபுரம், சென்னை-13.

★

இதுவரையில் தலைமை நிலயத்திற்கு நன்கொடை அனுப்பி வைத்துள்ளவர்களின் பட்டியல்:—

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| மோகனரங்கன், சென்னை-12 | 1 | 0 | 0 |
| நா. வீரசேகரன், சென்னை-10 | 1 | 0 | 0 |
| சின்னப்பன்—ராசாம்பாள், குமரபுரி | 2 | 0 | 0 |
| திராவிடச் செல்வி, சென்னை-2 | 5 | 0 | 0 |
| ஏ துரைராஜ், பாளையங்கோட்டை | 0 | 12 | 0 |
| எம். குமார், நாமக்கல் | 15 | 0 | 0 |
| நவராசன், திருப்பூர் | 2 | 0 | 0 |
| தியாகராயநகர் பெயர் சூட்டு விழாவில் ஆர். எஸ் பாண்டியன் மூலம் | 1 | 0 | 0 |
| மனட்யா சி. தெரிசா | 2 | 0 | 0 |
| பி. முகமத், போர்ட் பிளேர், அந்தமான் | 70 | 0 | 0 |
| கே. பி. ஆர். ஜனும்மாள், ஜலந்தர் | 17 | 0 | 0 |
| புதுக்கோட்டை முத்தரங்கம், என் எஸ். நாராயணசாமி | 100 | 0 | 0 |
| மாறன், பாளையம்—திண்டுக்கல் | 1 | 0 | 0 |
| தோழர் மு. கருணாநிதி மூலம்: | | | |
| அன்புபயன், புனா 10 8 0; பல்லடம் ஆர். ரத்தினம் 15 0 0; எஸ். ராமையா 1 0 0 — எம். ஓ. கமிஷன் 0-4-0 நீங்கலாக | 26 | 4 | 0 |
| கொள்ளிடம் கலைவளர்ச்சி நாடகமன்றம் ஈ. கோ. ராமசாமி | 5 | 0 | 0 |
| ப. சீனிவாசன், பினாங்கு | 20 | 0 | 0 |
| க. சந்திரமோகன், மேட்டூர் அணை (பலரிடம் வசூலித்தது) | 25 | 0 | 0 |
| ஒய் ஏ. சுப்பு, கவுண்டப்பாளையம் | 2 | 0 | 0 |
| எஸ். கே. விஸ்வநாதன், புனா | 3 | 0 | 0 |
| திருவாளர்கள் எஸ் பி சவுந்தரபாண்டியன்—செ. சி. சிற்றரசு, ஜித்ரா—கிட்டா (மலேயா) | 6 | 10 | 0 |
| சி. ராசகோபால், சாமல்குளம் | 2 | 0 | 0 |
| கோ. ராமசாமி, யாழ்ப்பாணம் | 15 | 0 | 0 |
| மேட்டுப்பாளையம் பொதுக்கூட்டத்தில் | 1 | 1 | 0 |
| தம்பி, ஆனைக்காரன்சத்திரம் | 9 | 0 | 0 |
| பி. பத்மராசு, நல்லிபாளையம் | 1 | 0 | 0 |
| கே. பி. ராசகோபால், திருமலாபுரம் | 5 | 0 | 0 |
| ஈ. குஞ்சிதபாதம், நாஞ்சலூர் | 21 | 0 | 0 |
| வள்ளுவர் படிப்பகம், கவரப்பாளையம் | 1 | 9 | 3 |
| ஏ. பரமசிவன், திருப்பத்தூர் | 1 | 8 | 0 |
| ஆக மொத்தம் ... | 362 | 12 | 3 |

## மல்லூரில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

23—10—55 மாலை 6 மணிக்கு, மல்லூர் சந்தைப்பேட்டையில், தோழர் ஜி பி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர் ஆர். தாண்டவன், தி. மு கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசிய பின், தோழர்கள் குப்புசாமி, பெருமாள், ப. இராமலிங்கம், ப. கண்ணன், ஆனைமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின்னர், தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம் எல். ஏ., அவர்கள், 'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வடநாடும் தென்னாடும்' என்பதுபற்றி விளக்கிப் பேசினார்.

கூட்ட இறுதியில் மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கை பொதுவாகத் திராவிடத்திற்கும் திராவிடர் நலனுக்கும் மாறுபட்டிருப்பதைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## சுல்தான்பேட்டை தி. மு. கழகம் (பாலக்காடு)

17—10—55 மாலை 6½ மணியளவில், பாலக்காடு சுல்தான்பேட்டை தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் எஸ். கே சாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வி. கே. சாமி, எஸ். கே. சாமி, சி. வி எஸ் சுந்தரம் ஆகியோரை முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகவும் கொண்ட நிர்வாகக் குழுவும் 12 பேர்கள் கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## கள்ளிப்பாளையத்தில் தி.மு. கழகப் பொதுக் கூட்டம்

12—10—55 மாலை 6-30 மணிக்கு, அர்ச்சுனன் திடலில், தோழர் வி. ஏ. இராமநாதன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் வி. கே இராசு, சி. வெ. வேலப்பன், லோ. கருப்பையா, கோவை செழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்தில், கள்ளிப்பாளையம் தோழர் சின்னத்தம்பி அவர்கள் ஆண் குழந்தைக்கு, தோழர் கோவைசெழியன், 'அண்ணாதுரை' எனப் பெயர் சூட்டினர். இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது— வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

# 'இந்தியாவுக்கு உரிமை உண்டு'

## கோவாவை கோருவது பற்றி செஞ்சீன கருத்து

ஹாங்காங், அக். 26—

கோவாவை இந்தியா கோருவதற்கு சீனா தனது ஆதரவைத் தெரிவித்திருக்கிறது.

"மக்காவோ சீனப் பிரதேசம்; போர்ச்சுகீசிய காலனி ஆதிக்கவாதிகளின் கையிலிருந்து தங்கள் பிரதேசத்தை திரும்பக் கோருவதற்கு சீன மக்களுக்கு உரிமை உண்டு" என்று பீகிங் வானொலி கூறியது.

இதற்கிடையில், மக்கோவா காலனி ஏற்பட்ட 400-வது ஆண்டு விழாவின்போது, விரிவான கொண்டாட்டங்களைத் தவிர்க்குமாறு சீனப் பிரதமர் சூ-என்-லாய் கேட்டுள்ளதாகவும், அதன் போதுதான், கோவாமீது இந்தியாவுக்குள்ள பாத்தியதை குறித்து ஆதரவு தெரிவித்ததாயும் கூறப்படுகிறது.

### 'ஆத்திரத்தை உண்டுபண்ணக் கூடாது' என எச்சரிக்கை

"மக்காவோவில், போர்ச்சுகீசிய ஆதிக்கம் ஏற்பட்ட 400-வது ஆண்டு விழாவைக் கொண்டாடி, சீன மக்களுக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணக்கூடாது" என்று, சீனக் கம்யூனிஸ்டு பத்திரிகை எச்சரிக்கை விடுத்துள்ளதாம்.

### அறிவித்துவிட்டனராம்!

"400-வது ஆண்டு விழாவைக் கொண்டாடினால், சீனா ஆத்திரமடையக் கூடும்" என்ற தகவலை, போர்ச்சுகல்லுக்குத் தெரிவித்துவிட்டதாக பிரிட்டிஷ் அயல்நாட்டு அமைச்சர் காரியாலயம் அறிவித்துள்ளதாம்.

### மக்காவோ எங்கே?

சீனாவின் முத்து நதி, கடலில் சேருமிடத்திலுள்ள ஒரு சிறிய தீபகற்பத்தில் மக்காவோ இருக்கிறது. அதன் மக்கள் தொகை 1,90,000; இதில் சுமார் 3,000 பேர் போர்ச்சுகீசியரும், மற்றவர்கள் ஐரோப்பியருமாவர். ஹாங்காங்கிலிருந்து மக்காவோ 40 மைல் தூரத்தில் இருக்கிறது.

# கடலோரக் கப்பல் கட்டணம் உயர்வு

பம்பாய், அக். 25—

இந்தியக் கடலோரத்தில் நடத்தப்படும் கப்பல் 'சர்வீசு'களில், சாமான்களுக்கு கட்டணம், அக். 15-ந் தேதியிலிருந்து 5 சதவிகிதம் அதிகரிக்க மத்திய சர்க்கார் அனுமதிக்க உத்தேசித்திருப்பதாக உத்தியோகப் பூர்வமாக அறியவருகிறது

கடலோரக் கப்பல் சர்வீஸ் நடத்துவோர் சங்கம், சாமான்களுக்கு விதிக்கப்படும் கட்டணத்தை பத்து சதவிகிதம் உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தது; அதிக பட்சம் 5 சதவிகிதம்தான் உயர்த்த அனுமதிக்க முடியும் என சர்க்கார் தெரிவித்திருக்கிறது.

# பெண்கள் கிருத்துவக் கல்லூரியில் பொதுச்செயலாளர்

சென்னை பெண்கள் கிருத்துவக் கல்லூரித் தமிழ் இலக்கியக் கழகத்தின் சார்பாகச் சிறப்புக் கூட்டம் ஒன்று 19—10—55 மாலை 4-30 மணிக்குக் கல்லூரிச் சொற்பொழிவு மண்டபத்தில் நடைபெற்றது.

மாணவிகளும், ஆசிரியைகளும் பெருவாரியினராகக் குழுமி மண்டபம் முழுவதும் நிரம்பியிருந்தனர்

தமிழாசிரியைகளும், இலக்கியக் கழகச் செயற்குழு உறுப்பினர்களும் சேர்ந்து தோழர் இரா நெடுஞ்செழியன் அவர்களுக்குத் தேனீர் விருந்து ஒன்று ஏற்பாடு செய்திருந்தனர்.

கூட்டத்தின் துவக்கத்தில் தமிழ்த் தாய் வாழ்த்து, மாணவி ஒருவரால் இனிய முறையில் எடுத்து இயம்பப்பட்டது.

பின்னர், இலக்கியக் கழகத் தலைவியர் தோழியர் அஞ்சலா மனோசா அவர்கள் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைக் கழகத்தின் சார்பாக வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு மலர்மாலை சூட்டப்பட்டவுடன், அவரே கூட்டத்திற்குத் தலைமை தாங்கி, 'புதுமைப் பெண்' என்ற தலைப்பில் அரியதோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள்.

இறுதியில் கழகச் செயலாளர் நன்றி கவில கூட்டம் மாலை 6-மணிக்கு இனிது முடிவுற்றது.

# தெ. ஆ. இன ஒதுக்கல் கொள்கை

## சமரச முயற்சி தோல்வி

நியூயார்க், அக் 26—

தென்னாப்பிரிக்காவில் இந்தியருக்கு எதிராக இன ஒதுக்கல் கொள்கை கடைபிடிக்கப்படுவது குறித்து எழுந்துள்ள சிக்கலைத் தீர்த்துவைக்க, ஐ நா. முயற்சி தோல்வியுற்றதை ஐ நா. பொதுச் செயலாளர் இன்று அதிகாரபூர்வமாகத் தெரிவித்திருக்கிறார்.

"கடந்த ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்தில், 'இந்தியா, பாகிஸ்தான், தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் நேரடியாகக் கூடிப்பேசி சிக்கலுக்குப் பரிகாரம் தேட வேண்டும்' என்று தீர்மானம் நிறைவேறியிருந்தது.

"ஆறு திங்களுக்குள் உடன்பாடு ஏற்படாவிட்டால் சமரசம் செய்து வைக்க பொதுச்செயலாளரை நியமிக்கலாம்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது இந்த ஆண்டு ஏப்ரல், மே திங்களில் இந்தியப் பிரதிநிதி ஆப்பிரிக்க சர்க்காருடன் நடத்திய கடிதப் போக்கு - வரத்து முதலியனவற்றின் நகலை அறிவித்ததிலிருந்து இம்முயற்சி தோல்வியுற்றதாகத் தெரிகிறது," என்று, ஐ நா. பொதுச்செயலாளர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

★

## இன ஒதுக்கல் கொடுமை

கத்தோலிக்க இதழ் கண்டனம்

வாடிகன் நகரம், அக். 27—

"தென்னாப்பிரிக்க சர்க்காரின் நிறபேதக் கொள்கை, அநியாயமானது — ஒழுக்கக் கேடானது; இந்த இன வேறுபாடு, மனித இனத்தைப் புண்படுத்துவது —அவமதிப்பதாகும்,"

என்று, வாடிகன் நகர செய்தித் தாளான 'அப்சர்வேடர் ரோமானோ' என்ற இதழ், கடுமையான வாசகங்களில் எழுதியிருக்கிறது.

அமெரிக்காவிலுள்ள லூசியானாவில், சில நாட்களுக்கு முன்பு; கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில், நீக்ரோ பாதிரிஒருவர் பூசைநடத்துவதை எதிர்த்து சில வெள்ளை இன கிருத்துவர்கள் குரல் எழுப்பியதையும், இந்த இதழ், இதற்குமுன் கடுமையாகத் தாக்கியிருந்தது.

"இன ஒதுக்கலும், இன வேறுபாடும் நாகரீகத்திற்குப் புறம்பானது" என்றெல்லாம் கூட அந்த இதழ், கண்டித்து எழுதியிருக்கிறது.

## கை நுட்பத் தொழில்

சென்னைக்கு இந்திய சர்க்கார் கடன்

புதுடில்லி, அக் 26—

கைநுட்பத் தொழில்களின் அபிவிருத்திக்காக, இந்திய கைநுட்பத் தொழில் கழகத்திற்கும், சென்னை, பஞ்சாப், அசாம், மேற்கு வங்கம் ஆகிய நான்கு மாநிலங்களுக்கும், மத்திய சர்க்கார் மேலும் ரூ. 2,12,000 வழங்கியிருக்கின்றனர்

சென்னைக்கு ரூ. 57,900 கடனும், ரூ. 16,006 மானியமும் கிடைக்கும் என்றும் தெரியவருகிறது.

மீன்பிடி படகுகளில் இயந்திர சாதனங்களைப் பொருத்துவதற்கான திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, சென்னை சர்க்காருக்கு நடப்பு ஆண்டில் மொத்தம் ரூ 1,05 இலட்சம் கடனாக வழங்குவதென இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர். மாநில சர்க்காரும் அதேபோல ரூ 1,05 இலட்சம் வழங்குவதுடன், குறிப்பிட்ட மாதிரிகளில் 20 மீன்பிடி படகுகளை அமைத்து அவற்றை மீனவர்களுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்வார்கள்.

---

புல்கானின், குருஷ்சேவ் சென்னை வருகை

நகர சபை வரவேற்பளிக்கும்

சென்னை, அக் 28—

ரஷ்யப் பிரதமர் புல்கானினுடன், சென்னைக்கு வருகை தரும் ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சியின் செயலாளர் குருஷ்சேவுக்கு வரவேற்பு அளிப்பதற்கு, நேற்று மாலை நடைபெற்ற சென்னை நகர சபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

புல்கானினுக்கு வரவேற்பு அளிக்க முன்னமேயே முடிவு செய்யப்பட்டுள்ளது.

## நான்கு வல்லரசு மாநாடு ஆரம்பம்

ஐரோப்பிய சமாதானம் பற்றி திட்டங்கள்

ஜினிவா, அக். 27—

நான்கு வல்லரசுகளின் வெளிவிவகார இலாகா மந்திரிகள் மாநாடு இன்று இங்கு துவங்கியிருக்கிறது.

மேற்கத்திய வல்லரசுகளான பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகள், கூட்டாகச் சேர்ந்து, 'ஜெர்மன் ஐக்கியத்தின் மூலம் ஐரோப்பாவில் அமைதியை நிலை நாட்டுவது' என்று ஒரு நீண்ட காலத் திட்டத்தைத் தாக்கல் செய்திருக்கின்றன. ஆனால், ரஷ்ய வெளிவிவகார மந்திரி மாலடோவ், 'ஜெர்மனி ஒன்றுபடுவதற்குமுன், ஐரோப்பிய அமைதி ஒரு பாதுகாப்பு முறையின் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும்' என்று வற்புறுத்தியிருக்கிறார்.

பின்னர், நான்கு மந்திரிகளும், வழக்கமான நடைமுறைகளுக்குப் பின், ஐரோப்பாவைப் பொறுத்து ஒரு ஆக்கிரமிப்பு மறுப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்ளுவதையும், ஜெர்மன் ஐக்கியத்தை உருவாக்குவதையும் ஒரே காலத்தில் செய்வதற்கான தங்கள் திட்டங்களை மாநாட்டில் தாக்கல் செய்திருக்கின்றனர்.

இன்றைய கூட்டத்திற்கு பிரெஞ்சு மந்திரி பினே தலைமை தாங்கினார். தொடர்ந்து, மாக்மிலன், மாலடோவ், டல்லஸ் ஆகியோர் தலைமை தாங்குவர்.

## பல்கலைக் கழக போதனா மொழி

'இன்னும் 30 ஆண்டுகளுக்கு ஆங்கிலமே நீடிக்க வேண்டும்'

சென்னை, அக். 27—

அலுவல் மொழிக் குழுவினரின் கேள்வித் தாளுக்கு பல்கலைக் கழக சிண்டிகேட் தந்திருந்த பதில்களை, கழகத்தின் 'செனட்' அங்கீகரித்திருக்கிறது

'கல்லூரிகளில் போதனா மொழியாக ஆங்கிலமே இன்னும் 30 - ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்று அலுவல் மொழிக் குழுவினருக்கு அறிவித்தது சரியே' என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

'இடைக் காலத்தில் வட்டார மொழியை போதனா மொழியாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்' என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

---

இந்தியாவில் அல்ல — அமெரிக்காவில்!

செப்டம்பர் மாதத்தில் அமெரிக்காவில் வேலை செய்வோர் தொகை 6,17,23,000 அந்த மாதத்தில் இதுவரை அவ்வளவு தொகையினர் வேலை செய்ததில்லையாம!

வேலையில்லாதார் தொகை 1953-க்குப் பின் என்றும் இல்லாத முறையில் குறைந்துள்ளதாம்!

## குடந்தையில் அண்ணாதுரை

30-10-55 காலை 9 மணிக்கு, குடந்தை மீனாட்சி தியேட்டரில், இளைஞர் தமிழ் மன்ற கட்டிட நிதிக்காக, தோழர் சி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில், சிறப்புக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி. என். அண்ணாதுரை, என். வி. நடராசன், கே.ஏ. மதியழகன், மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

30—10—55 மாலை 4 மணி அளவில், போர்டர் நகர மண்டபத்தில், கும்பகோணம் நகர தி. மு. சழகச் சார்பில், அண்ணா அவர்கள், மாணவர்களிடையே ஆங்கிலத்தில் பேசுவார்.

30—10—55 அன்று மாலை, குடந்தை அரண்மனைத் தோட்டத்தில், குடந்தை நகர தி. மு. சழகச் சார்பில், தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் சி. என். அண்ணாதுரை, மற்றும் பலர் பேசுவர்.

## ஈரோடு நகர தி.மு.கழக உறுப்பினர்கட்கு

"ஈரோடு நகர தி. மு. சழகத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல் குறித்து விவாதிப்பதற்காக, 1-11-55 மாலை 5 மணிக்கு, நகர தி. மு. சழக அலுவலகத்தில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். எல்லா உறுப்பினர்களும் கலந்து கொள்ள வேண்டுகிறேன்,"

என்று, கோவை மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் ஈ. வெ கி. சம்பத் அறிவிக்கிறார்

---

சென்னை 5-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு

30—10—55 காலை 9 மணிக்கு, சென்னை 5-வது வட்ட தி. மு கழகப் பொது உறுப்பினர் கூட்டம், கழக இல்லில் நடைபெறும்

---

சென்னை 17-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு

30—10—55 மாலை 4 மணிக்கு, சென்னை 17-வது வட்ட தி மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம், சென்னை-சூளை, எண் 48, சட்டண்ண நாய்க்கன் தெருவில் நடைபெறும்.

---

திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகப் பொது உறுப்பினர்கட்கு

30—10—55 காலை 8 மணிக்கு, சென்னை-திருவல்லிக்கேணி கே எஸ் பாண்டியன் படிப்பகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது, படிப்பக வளர்ச்சி பற்றியும், மற்றும் பல முக்கிய பிரச்சினைகள் பற்றியும் முடிவு செய்யப்படும்.

---

திருக்குறள் வகுப்பு

29—10—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை தாய்மார் கழகச் சார்பில், எண் 15, முத்துகிருஷ்ணன் தெருவில் நடைபெறும். 'தெரிந்து தெளிதல்' என்ற தலைப்பில், திரு. மயிலை-சிவமுத்து; திருமதி ஆர். சுந்தராம்பாள் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

---

திருமணம்

30-10-55 காலை $9\frac{1}{2}$ மணிக்கு, மாயூரம், புளியந்தெரு, மணமகன் இல்லில், தோழர் ம. கி. இராமசாமி—தோழியர் சாவித்திரி திருமணம் நடைபெறும். தோழர்கள் ஈ வெ கி. சம்பத், என் கிட்டப்பா, த காசிநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

## கழகக் கூட்டங்கள்

★

மேலப்புதூர் (திருச்சி)

(தி. மு க. படிப்பகத் துவக்கவிழா)

படிப்பகத்தின் முன்பு

30—10—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: ச. செல்வராசன்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

எம். எஸ். மணி

நெடுமாறன்

★

மேலூர்

முனியாண்டி கோவில் திடலில்

30—10—55 மாலை 6 மணிக்கு

பேசுபவர்:

கண்ணதாசன்

★

வெள்ளலூர் (கோவை மா.)

31-10-55 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, சவுண்டம்மன் கோவில் மைதானத்தில், தோழர் வெள்ளிங்கிரி தலைமையில் நடைபெறும். தோழர்கள் கோவை செழியன், சி டி. தண்டபாணி ஆகியோர் பேசுவர்.

★

கல்லார் எஸ்டேட் (வால்பாறை)

30—10—55 காலை 8 மணிக்கு, தோழர் கே பி பிச்சைமுத்து தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஆ க வேலயன், ஜே. பி ஜபக்கினி, கே. பி. மருதமுத்து, மற்றும் பலர் பேசுவர்.

---

நெல்லிக்குப்பம் மஜீத் மன்றத் துவக்க விழாப் பொதுக்கூட்டம்

30-10-55 மாலை 6 மணிக்கு, மாயூரம், கூறைநாடு கடை வீதியில், தோழர் ச. மீனாட்சி சுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஈ.வெ.கி. சம்பத், என். வி. நடராசன் ஆகியோர் பேசுவர்.

---

சொற் பயிற்சிக் கூட்டங்கள்

30—10—55 மாலை 6 மணிக்கு சென்னை-இராயபுரத்திலுள்ள வட சென்னை தாளமுத்து - நடராசன் முன்னேற்ற மன்றத்தில், தோழர் ஏ. ஜே இராபர்ட் தலைமையில் நடைபெறும். 'எது தேவை?' எனும் பொருள் குறித்து, தோழர்கள் என். வி. மதிவண்ணன், தாஸ், இரா. புவியரசு ஆகியோர் பேசுவர்.

• • •

30—10—55 காலை 8 மணிக்கு, சென்னை 16-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், சென்னை, ஆள்வார்பேட்டை-எண் 142, ஆள்வார்பேட்டை தெருவில், தோழர் மா. திருவேங்கடம் தலைமையில் நடைபெறும் 'நாமும்-மக்களும்' என்னும் பொருள் குறித்து, தோழர்கள் ஆ பெ பச்சையப்பன், இரா. அசமழகன், பெ. இராசமாணிக்கனார் ஆகியோ பேசுவர்.

• • •

29—10—55 மாலை 6 மணிக்கு, சென்னை-இராயபுரம். எண் 59, மன்னார்சாமி கோவில் தெரு, குறள் நெறிக் கழக அறையில், தோழர் கனிச்செல்வன் தலைமையில் நடைபெறும். 'கடமை' என்னும் பொருள் குறித்து தோழர்கள் பலர் பேசுவர்.

## 'பென் யூசுப் மன்னராக வேண்டும்'

மொராக்கோவில் மீண்டும் கிளர்ச்சி

மாரகேஷ், அக். 27—

மொராக்கோவில், தங்கள் மன்னர் பென் யூசுப் நாடு திரும்ப வேண்டும் என்று, கிளர்ச்சி மீண்டும் துவக்கப்பட்டிருக்கிறது.

மாரகேஷ் பாஷா, 'பென் யூசுப் மீண்டும் மன்னராக்கப்பட வேண்டும்' என்று, இப்போது கூற முற்பட்டுள்ளார். இதுநாள் வரை, அவர், பென் யூசுபின் விரோதியாயிருந்து வந்திருக்கிறார். இப்போது அவர், மொராக்கோ சுல்தானாக பென் யூசுபே இருக்க வேண்டுமென்று கோருவதால், அந்த பாஷாவை வரவேற்க பெரும் கூட்டம் கூடி நின்றது. அந்தக் கூட்டத்தினர், 'பென்யூசுப் மன்னராக வேண்டும்' என்று குரல் எழுப்பியிருக்கின்றனர். கட்டுக் கடங்காத கூட்டத்தினர் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாக, இருவர் காயம்பட்டதாகவும் தெரியவருகிறது.

## முதன் மந்திரி பேராசை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"இப்படி இருப்பதினால், திரு-கொச்சியின் தென் பகுதியில் தமிழருக்கு உள்ளாகியுள்ள பகுதிகள் பற்றிய விசாரணை, கேரளத்திற்குச் சாதகமான முடிவையே தரவேண்டும்," என்று, முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்த மேனன் பத்திரிகையாளரிடம் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

அவர், 'சென்னையுடன் இணைக்கப்பட வேண்டும்' என்று மாநிலக் குழு சிபார்சு செய்துள்ள தமிழ் தாலுகாக்கள் தமிழகத்துடன் இணையக் கூடாது என்றும், அவையும், நீலகிரியிலுள்ள கூடலூரும், கேரளத்துடனேயே இணைய வேண்டும் என்று, டில்லியில் நடைபெற்ற முதன் மந்திரிகள் மாநாட்டில் கோரியதாயும் தெரிவித்திருக்கிறார்.

★

வடஎல்லைப் பாதுகாப்புக் குழு வற்புறுத்தல்

சென்னை, அக். 28—

ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில், 27—10—55ல் நடைபெற்ற மேற்படி கமிட்டியின் கூட்டத்தில், சென்னை மாநிலத்திற்கு திருப்பதியே வட எல்லையாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையிலேயே ஆந்திர—சென்னை முதலமைச்சர்களுக்கிடையே பேச்சு வார்த்தை நடைபெற வேண்டுமென்றும், இப்பிரதேசங்களின் வருங்கால மொழி அடிப்படையில் மாத்திரமன்றி, கலாச்சாரம், பூகோள அமைப்பு, மற்றும் நிர்வாக வசதி ஆகியவற்றையும் கவனித்து முடிவு செய்ய வேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது

★

## உத்திர பிரதேசம் பிரிக்கப்படும்?

காங்கிரஸ் ஊழியர்கள் கோரிக்கை

புதுடில்லி, அக் 27—

மற்றெல்லா மாநிலங்களையும்விட பெரிய அளவில் மக்கள் தொகையும், நிலப் பரப்பும் கொண்டதாயுள்ள உத்திர பிரதேசம் பற்றி ஏற்கனவே பல பகுதிகளில் கண்டனக் குரல்கள் எழுந்துள்ளன.

இப்போது, அதே மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரஸ் ஊழியர்களும், எம். எல். ஏ-க்களும் கொண்ட ஒரு தூதுக் குழுவினர், பிரதமர் நேருவைச் சந்தித்து, 'உத்திரப் பிரதேசத்தை, நிர்வாகத்திற்குச் சௌகரியமான இரண்டு மாநிலங்களாகப் பிரிக்க வேண்டும்' என்று கோரும் 'அறிக்கை' ஒன்றை தந்துள்ளனர்.

'உ. பி. - யின் மேற்கு மாவட்டங்களையும், அவற்றையடுத்துள்ள சில பஞ்சாப் மாவட்டங்களையும் சேர்த்து, தனி மாநிலம் அமைக்க வேண்டும்,' என்று, அந்த அறிக்கையில் கோரப்பட்டிருக்கிறதாம்.

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.